ஸ்ரீ விஷ்ணுமயம்.

# ஸ்ரீமஹா பாகவத புராணப் படல அட்டவணை.


| | பக்கம். |
|---|---|
| ஸ்ரீ உருக்குமணி நாச்சியார் திருக் கலியாணப் படலம் ... | ச |
| சாம்பவதியார் திருக்கலியாண ... | ஙரு |
| சத்தியபாமையார் திருக்கலி ... | ச0 |
| சத்தன்னுவாவதைப்படலம் ... | சங |
| காளிந்தியார்திருக்கலியாணப் ... | சஎ |
| மித்திரவிந்தையார் திருக்கலி ... | ருங |
| நாக்கினசித்து திருக்கலியாண ... | ருரு |
| பத்திரையார் திருக்கலியாண ... | ருகூ |
| இலக்கணையார் திருக்கலியா ... | சாஉ |
| நரகாசுரன் வதைப்படலம் ... | சாசா |
| பாரிசாதப்படலம் ... ... ... | எஅ |
| சுபத்திரையார் திருக்கலியா ... | அரு |
| வசுதேவர் வேள்விப் படலம் ... | கூக |
| ண்டாகன்னன்மோட்சப்பட ... | க0க |
| கைலாசயாத்திரைப் படலம் ... | க0சா |
| வுண்டரன்வதைப்படலம் ... | கக0 |
| கக்கணன் வதைப்படலம் ... | ககஎ |
| விந்தன்வதைப்படலம் ... | கககூ |
| ன்செனனப்படலம் ... | கஉங |
| சம்பரன் வதைப்படலம் ... | கஉரு |
| அநிருத்தப்படலம் ... ... ... | கங0 |
| அங்கிசமன்டிபிகன்வதைப்ப ... | கஙசா |
| உருக்குமி திருக்கலியாணப் ... | கரு0 |
| நிருகராசன் மோட்சப்பட ... | கருரு |
| அத்தினபுரப்பேர்ப்புப்படலம் ... | கருஅ |
| வாணாசுரப்படலம் ... ... ... | கசாசா |
| மகதராசன்வதைப்படலம் ... | ககூஎ |
| சிசுபாலன்வதைப்படலம் ... | உகஎ |
| சாலுவன்வதைப்படலம் ... | உஙஉ |
| தந்தவக்கிரன்வதைப்படலம் ... | உஙகூ |
| பாண்டவர்வனவாசப்படலம் ... | உசக |
| குருகுலமரபுப்படலம் ... ... | உசச |
| தெட்சப்படலம் ... ... ... | உகூஅ |
| பற்குனப்படலம் ... ... ... | ங0உ |
| அளகாபுரிப்படலம் ... ... | ங0எ |
| சிந்துபதி சிரபங்கப்படலம் ... | ஙகஉ |
| பாண்டவர் அக்கியாதவாசப் ... | ஙகஅ |
| உத்தியோகப்படலம் ... ... | ஙஉரு |
| பாரதப்படலம் ... ... ... | ஙஙசா |
| பலபத்திரராமன் தீர்த்த யாத்திரைப்படலம் ... ... ... | ஙசாஎ |
| துரியோதனன்வதைப்படலம்... | ஙசாகூ |
| பரிட்சித்துசனனப்படலம் ... | ஙஎச |
| குசேலப்படலம் ... ... ... | ஙஎகூ |
| மிதிலைப்படலம் ... ... ... | ஙஅங |
| வைதீகப்படலம் ... ... ... | ஙஅரு |
| உபதேசப்படலம் ... ... ... | ஙஅகூ |
| வைகுண்டப்படலம் ... ... | ச0ங |
| மார்க்கண்டப்படலம் ... ... | ச0எ |
| விருகாசுரப்படலம் ... ... | ச0கூ |
| பிருகுப்படலம் ... ... ... | சகஉ |
| பரிட்சித்துமோட்சப்படலம் ... | சகரு |
| செனமேசெயப்படலம் ... ... | சகசா |
| கற்கிப்படலம் ... ... ... | சஉகூ |
| வைநதேயப்படலம் ... ... | சஙங |

ஸ்ரீ கிருஷ்ணாய நம:

இப்புராண பரிசோதகராகிய-பூனேபேட்டை

வெ. முத்துநாயுடு அவர்களாலியற்றிய

# ஸ்ரீமஹா பாகவத புராணப் படலப் பா.

திருவரங்கனைமிசாரணியமாதுதிகழ்நாடிகனர்நாச்சியார்க்கேய்த்திரன்
பெரியவராகக்கபிலநாரசிங்கம்பின்னே துருவன்மச்சகூர்மமண்டம்
அரியபிருதுவிடபன்வாமனமசாமிளன்றுருக்குமாங்கதமன்னம்பரீடன்
பரசிராமனுமாமிராகவன்சீர்ப்படலமிருபானிரண்டாய்ப்பகுத்ததாமே.

தேவகிசிறுகண்ணனவதாரம்பூதகிறந்சகடன்காலியன்குக்குடனைமாய்த்த
லாவினவநீதமேறதிபாண்டன்மேனுடருச்சனபூம்பெகனகன்வற்சாபகாரங்
கோவிந்தேனுகன்காளியன்பெலம்பன்கூறைகொள்கிந்தையந்தியுங்கோவர்த்தனந்
தான், மாவருணன்குழலூதப்பிகைகப்பின்னைமறவரிட்டன்கேசிவியோமனுமா
மே.

அக்குரூரன்முருகன்சுதாமாவரியதிரிவக்கிரியுஞ்சிலையிறுத்தல்
தக்ககஞ்சன்முயற்சிகுவலையாபீடஞ்சாணூரன்முட்டிகன்கஞ்சனைவதைத்தல்
உக்கிரசேனன்குருதட்சிணைபுரேரிலுத்தவன்பாண்டவஞ்சராசந்தனோடல்
துக்கசிரகாலன்காலயவன்விறல்தூயவிதேகமுனைநாற்பானிரண்டே.

படங்காணல்விதர்ப்பராசன்றன்மந்திரம்பகர்ந்துதலைங்கல்சேதிபராசன்னோர்
வடம்பூணுநாச்சியார்தேரினேறல்வருசேனைசூழ்தப்பவுண்டாறனும்போரின்
மடங்காதசாலுவனுந்தந்தவக்ரன்மகதன்சிசுபாலனுருக்குமன்முதோடல்
இடஞ்சேர்துவாரகையின்படலத்தோடுசெப்பினர்மூவேழ்படலஞ்சிறக்கத்தானே

**உருக்குமணி** சாம்பவதிசத்யபாமைக்குபர்த்ததிருமணஞ்சத தன்னுவாலைக்கே
ல், முருக்கிதழாள்காளிந்திமித்ரவிந்தைநிமொய்குழல்நாக்கினசித்துபத்திரைப்பெ
ன், திருக்கிளிலக்கணையிவர்கள்வதுவைபோர்ப் பிரியகன்மனையும்பாரிசாத
மருக்கொள்குழற்சுபத்திரையின்மன்றலூய வசுதேவர்வேள்விகண்டா கருணை
மோட்சம்.

**கயிலை**யாத்திரைபவுண்டரன்சுதக்கணன்றுவிந்தன்வதையுமதன்சனனங்காலு
அயில்சம்பரன்வதையுமநிருத்தன்மேற்றமட்டிசடிபிகன்வதைருக்குமிகல்ய
இயனிருகன்மோட்சமத்திகைமைப்பெற்றலிகஸ்வாரனேன்றேமுணிந்தன்மதுத
ன், சயமதிலாச்சிசுபாலன்சாலுவன்றந்தவக்கிரன்வதையுந்தாம்மூம்பாம்

**பா**ண்டவர்கள்குருமரபுசக்கன்வேள்விபற்றுணுமனைவேகசிந்துபதிகம்பங்கம்
பாண்டவர்களக்யாபமுற்றியாகம்பாரதமும்பலராமன்யாத்திரைபோரின்
மாண்டசுயோதனன்பரிச்சித்துசெய்யப்பதிபிகுசேலன்மிதிலையும்வைதிகம்
வேண்டுபதேசம்வைகுண்டம்மார்க்கண்டன் விருகசுரன்பிருகுபரீட்சித்துமோட்
சம்.

செனமேசெயன்கற்கிப்படல்மூவேழ்சேரிரண்டுகைகபதியின்படலமொன்று
மனமாகுபாகவதப்பிரிவாறுக்கும்வருபடலநூற்றுமுப்பத்திரண்டாகக்
கனமாகுதமிழில்நென்பானாயிரத்தின்கவியுரைத்தான்செவ்வியருளா
முனமீரொன்பானாயிரங்கிரந்தம்மொழிந்தசுகமுனியடியைமுடிமேற்கொள்வாம்.

அரவினிற் றுயில்பிரிந் தருளிவந்தச்சுதன்
விரிகடற்றுவரையின் வீதிமேவினனெனுத்
தரணியிற் கலைவிழக் குழல்களுஞ் சரியவே
யரியெழக் கிளிகள்போ லனைவரும்மணுகினர். (கநந)

மானினம்வருவபோன் மயிலினம்மெழுவபோற்
றேனினம்முரன்மலர்க் குழலினர் திருவனர்
மீனினம் வெருவுநல் விழியினர்தொறுநிரைக்
கானினின்றுலவிய கண்ணனைக் கண்டனர். (கநச)

ஆடுவார்வானமீ தரிவையர்மார் நாணவே
பாடுவார் சுரர்களும் முனிவரும் பரிவுறக்
கோடிஞேடாழிகை கொண்டமால் கூடிவினல்
வாடினர் மாரவேளெய்யவே மடநலார். (கநரு)

தாளமா மணிகொ டாவடமெலாந் தனமிசைப்
புரளமைக்குழன்மலர் பொலியவே யரிவைமார்
திரளுளோர் மயலெழக் கலைவிழச்சேருவா
ருருளுமாவிரதமீ துலகுணேமியன் வர. (கநசு)

பூவினிற் றிருவெனப் பொலிமினர் வேனில்வே
ளேவவே வருகணைக் கிடையுமெம் முடலிடத்
தாவிவிட் டகலுமுன் னணைகிலீரோ விருந்
தாவனத் தெய்திடுஞ் சதுரவென் றுரைசெய்வார் (கநஎ)

தழலெழச் சிலைமதன் விடவெழுஞ் சரமதா
லுழலுகிற் றிடுமெமை யுறவணைத்தருளிநன்
குழலிசைப் பவளவா யமுதினைக் கொடுவிடத்
தழலுமிழ்ந் தெழுமரா மிசைநடித் தருளுவாய். (கநஅ)

வேறு.

மல்லர்மாள வமர்செய்திடு மாயா
யொல்லைமேவி யெமையுற் றணைத்தாளா
வல்லுநீள்பகலு மன்மதனடரா
வெல்லும் வாளியை விலக்குதி யென்றார். (கநக)

ஓதி மாதர்கட மொக்கலை யுற்றே
பேதை யாருமொரு பெண் ணமிர் தன்னாள்
காதரு னறியாள் கடலமர்வோன்
போதவே புயலிதாகுமென் றெண்ணி. (கசo)

இதுமுதற் பெண்பருவம் - எ - ம்-கூறப்படும்.

அமலன் கண்ணிணைகள் வாய்மல ரங்கை
கமலமென் றுளத்திற் கருதிக்கண்
ணுமிழுநித்திலஞ் சிந்திட வோடித்
தமரையிந்தமலர் தந்திடுமென்றாள். (கசக)

ரு - முதல் - எ - வயதுவரை பேதை.

பேதையிந்த வுரைபேசிட மாயோன்
மாதவன் விபுலை நாயகன் மற்றை

பாவையர்மகிழ்ந்திடப்பணிலமூதவே
மாவின்வாய்பிளந்துபுட்கிழித்தமாதவச்
சேவகன்மங்கலநாணைச்செங்கையாற்
காவிநேர்நயனிகந்தரத்தணிந்தனன். (௧௯)

பாவகன்றனைவலம்வந்துபாரினின்
மேவியவம்மிமின்மிதிக்கவிண்மிசைத்
தாவியவருந்ததிநோக்கத்தண்மலர்
தூவினரமரர்துந்துபிமுழங்கவே. (௨௦)

சிந்தையின்மகிழ்ந்தரிதேவிதன்னுடன்
றந்தையைவணங்கிநற்ருயூர்தாடொழு
திந்துவின்வண்ணனையிறைஞ்சினான்றன்முன்
வந்தடிபணிந்தனள்விதர்ப்பன்மாமகள். (௨௧)

சித்தசன்றனைத்தருதேவிபாதத்திற்
பத்திரைவணங்கியபின்னர்ப்பாற்கட
லத்தனோடோதனமருந்திச்சேக்கையா
மெத்தையினெய்தியேவிளங்கினானரோ. (௨௨)

நானமொண்ணிமசலநல்லகுங்கும
மேனியிற்கமழவேளிரதிவெள்கிடத்
தேனொடுபால்செறிந்தென்னச்சீதரன்
மானகுநயனிதன்னொடுமகிழ்ந்தனன். (௨௩)

குண்டினபுரத்துறுங்கோதைதன்னுட
னொண்டொடியார்மிகவுவந்துசூழ்ந்திடக்
கொண்டன்மின்குழாமொடுகூடச்சேர்ந்தபோன்
மண்டபத்திருந்தனன்மாயன்றானரோ. (௨௪)

## பத்திரையார் திருக்கலியாணப் படலம்

முற்றிற்று.

ஆ படலம் ௮-க்குக் கூடிய திருவிருத்தம் ௫௩௭.

ஸ்ரீருக்மணி, சாம்பவதி, சத்தியபாமா, காளிந்தி, மித்திரவிந்தா,

நாக்கினசித்து, பத்திரா சமேதாய நமோநமः

என்றவனுரைத்திட விறைவன்கூறுவா
னுன்றனையேலவேயும்பியென்றன்மே
லொன்றியவன்பனோவுரைத்தியென்றலும்
புன்மொழியொருவினோன் புகல்வதாயினான். (௯௨)

தெந்தகனாகியவெம்பிசீரிவாய்
புந்தியி லுன்றன்மேலன்பிலன்பொருந்
தந்தியைவதைத்தருடலைவென்றனு
நந்தகோபன்சுதன்நவில்வதாயினான். (௯௩)

ஏன்னலனறிகிலானெனின்முன்னோனெனு
முன்னுடனன்பனோவுரைத்தியென்னவே
பன்னகப்பாயலாய்பரிவிலானென்மேற்
பின்னவனெனக்கண்டாகருணன்பேசினான். (௯௪)

என்னையுமுன்னையுமிகழும்பின்னவ
னின்னலிற்கதியுறலெக்குணத்தினான்
மன்னுவிப்பேனெனமாயன்கூறலுந்
துன்னியதுணிதுணித்தவன்சொல்வானரோ. (௯௫)

அனுசன்மேலன்பறொழியாயென
மனமகிழ்ந்தெழின்மலிமாலென்பத்தர்க
ளினிமையாயருள்வைத்தால் யாவராயினுந்
துனியகன்றுயர்குவரொன்றுசொல்குவான். (௯௬)

நீயுமுன்னனுசனுநிகரிலாதொளி
ராயிரங்கண்ணினானகரினன்புடன்
போயமுதருந்தியேபோகந்துய்த்தபின்
றூயவென்பதியெய்தித்துலங்குவீரென்றான். (௯௭)

சுந்தரன்மொழிந்திடத்தொழுதகையனை
யிந்திரவிமானத்தினேற்றித்தம்பியோ
டந்தரதுந்துமிமுழங்கவாய்மலர்
சிந்தியேதேவராகரத்திற்சேர்த்தனர். (௯௮)

கடிவினைசெயுங்கண்டாகருணன்றம்பியோ
டிடர்கெடத்தேவர்தம்முருவமெய்தியே
யுடலொடுமமரர்தம்முலகமுற்றிட
வடதிசைகலுழன்மேன்மாயனேகினான். (௯௯)

## கண்டாகன்னன் மோட்சப் படலம் முற்றிற்று.

ஆ படலம், ௧௪க்குக் கூடிய திருவிருத்தம் ௯௬௨.

ஸ்ரீ கண்ணபிரான் றிருவடித் தாமரைத் துணை.

வேறு

அத்தியில்வாழ்வோன்
அத்திரமேவ
அத்திகளெல்லாம்
அத்திகளாய. (௪௮)

கோலவரிக்கோன்
கோலினமேவத்
தோலினமெல்லாந்
தோலினமாய. (௪௯)

அரிவிடும்வாளி
அரியினுமுடுகக்
கரியினமெல்லாங்
கரியினமாய. (௫௦)

பத்திரைகேள்வன்
பத்திரமேவ
அத்திரியெல்லாம்
அத்திரியாய. (௫௧)

கரிதனைவென்றோன்
கரதலவம்பால்
இரதமுமிளிர்பூ
விரதமுமாய. (௫௨)

சிந்துமகட்கோன்
சிந்துசரத்தால்
வெந்திறல்வீரர்
வெந்திறலானார். (௫௩)

வேறு

அத்தியேயத்தியாகவயமூராவுயமேயாகச்
சத்திசத்தியாகத்தலைவர்கொந்தலைவாராக
வித்தகவிரதமாவம்வித்தகம்விரதமாக
வத்திரர்க்கணுகாவையனத்திரம்பரந்தவம்மா. (௫௪)

சக்கரத்தண்ணலேவுஞ்சாயகந்துணிக்கவாங்கே
கொக்கினம்புரண்டுவீழக்குஞ்சரங்*குக்குண்மேவ
மிக்கிடும்பறவைமேன்மேல்விரிசிறைவயிற்றினெற்றிப்
புக்கழுந்தினவவ்வாக்கைபுரைவருபுனலின்மூழ்கி. (௫௫)

கதமுறுங்கயமாவையங்கணக்கில்லாவயவரெல்லாம்
விதமுறவிசிகந்தன்னாலிமைப்பின்முன்விபுலையின்கண்
சுதைசுரர்க்களித்தகோமான்றுலங்கியநாமமேத்தா
திதரதேவதையைச்சேர்வார்தவமெனவிற்றதன்றே. (௫௬)

வேறு.

மாயவன்வலத்தின்வடிவாளிமழைதூவப்
பாயிவுளிதேர்மிகுபருப்பதநிகர்த்த
தூயகரிவீரர்கடுணிந்துநிலன்வீழ
காயலைகைசூழ்ந்திடநடித்தனகவந்தம். (௫௭)

அம்பரமனம்புமழைதூவிடவடர்ந்த
வும்பறரையின்னயுதகோடிகளுருண்ட
வெம்புபரிவீரரிரதத்தொடும்விழுந்தார்
செம்புனல்களோடியதுதேவர்கடுதித்தார். (௫௮)

அரிசிலையினல்விடுமழற்கணையினாலே
கரியிரதம்வீரர்பரிமாளவதுகண்டே
எரிநயனனாகியபவுண்டரனெதிர்ந்து
வரவவனைநோக்கியுயர்மாயவனுரைப்பான். (௫௯)

நீயெனைவிடச்சொனநெடும்படைகடம்மிற்
றீயவவுன்மேல்விடுவனித்திகிரிதன்னை
மீயுயர்விசும்பினுயிர்போகுமுன்விலக்கென்
றூயனைசெய்துசுடராழியினைவிட்டான். (௬௦)

* குக்குள் = பூமிக்குள்.

வேறு.

எழில்கொண்மதன்றனக்கேயவனுயிராகியவிரதி
யழகின்மலியநிருத்தனையளித்தேயிடவன்பான்
மழையின்முகில்வனத்தானெடும்விதர்ப்பன்றிருமகளா
முழையின்விழியாடன்சுதன்மகன்மேனிகண்டுவந்தாள். (௫௫)

மாரன்னதிரோரடியொண்மகன்வாண்முகனோக்கிப்
பாரின்மறையோரின்புறப்பலதானமுஞ்செய்தே
யோர்விஞ்சிடவுயர்சாதகசவுளம்மிவைமுடித்து
நாரம்முறுகடன்மீதமர்நாதன்னெடுமெகிழ்ந்தான். (௫௬)

கயமன்றழைத்திடவந்தருள்கரியோன்மகன்சுதனுக்
குயரும்முபநயனஞ்செய்துமறையோதினர்க்கெல்லா
மியல்பின்னுறுபலதானமுமளித்தேயெழின்மலிந்த
வயிலொண்விழிநளினத்திருவுடனேமகிழ்ந்தமர்ந்தான். (௫௭)

அநிருத்தப்படலம் முற்றிற்று.

ஆ படலம் ௨௧-க்குக்கூடிய திருவிருத்தம் ௧௨௨௦

ஸ்ரீகண்ணபிரான் றிருவடிந்தாமரைகடுணை.

ஸ்ரீ

விஷ்ணுமயம்.

௧௦௦ - வது அங்கிசமன் டிபிகன்

# வதைப்படலம்.

கராவினைச்செற்றுக்கைம்மாக்களித்திடக்கதியையீந்து
மராமரமேழுமெய்துவாலியையவதைத்தபின்ன
ரராவினினடித்துவெண்ணெய்க்காடியேகுரவைகோத்த
பராபரமானசோதிபாதமேபற்றுநெஞ்சே. (௧)

சாலுவதேசந்தன்னைத்தனிக்குடைநிழலினேம்பும்
வேலொளிர்கரத்தான்மிக்கவிறலுடைப்பிரமதத்த
னீலகண்டனைத்தானோக்கிநெடுந்தவஞ்செய்துபெற்ற
னலமேசிகர்வாரங்கிசமனிடிபிகராவோரை. (௨)

மித்திரசகனாமவேதனோர்புரோகிதன்று
னத்தியிற்றுயில்வோன்றன்னைநோக்கியேயளவிலாண்டு
சுத்தநற்றவந்தான்செய்யத்தோன்றிமாலீயப்பெற்ற
புத்திரன்செனுர்த்தனன்றூன்புகழுடையொருவனுனன். (௩)

வெங்கணாகியடிபிகவீரியன்
சங்கடக்கையனைச்சார்ந்தென்முன்னவ
னெங்குளான்வினவினனியம்புவாயெனா
மங்குல்போலொளிருமெய்மாயன்கூறுவான். (ககச)

தமயனைத்தேடியடிபிகசார்ந்துநீ
யமுனையைக்கேளெனவிறைவன்கூறனு
நமனைநேரங்கிசன்றன்னைநாடியே
கமையிலான்காளியமடுவின்மூழ்கினான். (ககரு)

கோடடர்யமுனையிற்குதித்துத்தம்முனைத்
தேடிநீரழுவத்துட்டிரிந்துங்காண்கிலான்
வீடினானெனாமேவிக்கூலமே
லாடகன்காலன்முன்னழுதரற்றினான். (ககசா)

ஆவலின்வெண்ணெயுண்டபடிபட்டேயுழல்
கோவலவென்முனோன்றன்னைக்கொன்றிடும்
பாவிநீயென்றுநாப்பற்றிவாங்கித்தன்
னாவினாலறப்பறித்தரற்றிமாண்டனன். (ககஎ)

அங்கிநேரங்கிசனானுசன்மாண்டிட
மங்கிடாதருந்தவர்மகிட்சியெய்தினார்
சங்குதுந்துமியொடுமுழங்கச்சக்கர
னெங்குமன்னவர்தொழவிருந்தவேலையின். (ககஅ)

நறுந்துழாயணியரிநதியினண்ணிய
தறிந்துயர்நந்தனுமசோதைநங்கையு
நிறைந்தெழுகளிப்பொடுநேயவாயருஞ்
சிறந்திடுமரிவையர்குழுச்சேர்ந்தனர். (ககக்கூ)

சிந்தையிற்களிப்புறத்திருவினாயகன்
றந்தைதாயடியினின்முடியைத்தாழ்த்தலு
மைந்தனைமகிழ்வுறத்தழுவிவானிறை
யிந்துநேர்சிந்துவின்மகிட்சியெய்தினார். (கஉ0)

நெய்யிழுதுடன்றதிநிறைந்தவோதனந்
துய்யபாலனமலி * சூபமாதியாய்
வையமேழுண்டமாமுவயிற்றனா
மையனையருந்துவித்தனளசோதையே. (கஉக)

கடிமலர்த்தொடையலையணிந்துகங்கைசே
ரடியன்மெய்யழகுறக்கலவையப்பியே
யுடலெலாம்புளகமுற்றுச்சிமோந்துதன்
மடிமிசையிருத்தித்தான்மகிட்சியெய்தினள். (கஉஉ)

முன்னுறுதவத்தினான்முடிவிலாததோர்
நன்னலனெய்தியநந்தகோபனை
யிந்நிலத்தவரிமையோர்களேத்தவா
ழன்னையைநோக்கிமாலருளுவானரோ. (கஉங)

* சூபம்=ஓர் பலகாரம்.

தூயநற்கன்றுகடென்றுமோவலை
மேயவேபசும்புலுந்துளிர்க்குமோவிளங்
காயுடன்களங்கனிநிறைந்தகாவெலாம்
பாயுமான்கலையுடன்னெறித்துப்பாக்குமோ. (கசங)

மறுவிலாக்கறந்திடமலியும்பாறதி
நறுநெய்யோடிழுதுகணலங்கொளாய்ச்சிய
ருறியெலாமடுக்கியகலசத்துள்ளவை
சிறியவர்க்கித்தனுந்திருடற்றின்பமோ. (கசச)

ஆவினங்கன்றியாள்மெய்யுத்தகோவடர்
காவினிறாதும்வெய்யகைப்புயத்தினர்
ஆவிநற்கேசுயங்கோலகையின்பயி
கோவணியணியெலாமுளகொலோவென்றான். (கசரு)

இத்திறங்கேள்விபற்றியம்பகோவிந்த
தந்தையுந்தாயுமற்றயவினைத்துற்றிச்
சுந்தரவரைத்தனயாவுற்சோர்வில
வெந்தைநீமெய்த்திலாவெனவிரங்கினர். (கசசா)

நின்னையெம்பாடியில்விட்டுத்தங்காவலா
வின்னமேலபொறுக்கிலேம்மனைவிடம்பிய
அன்னையோடத்தனையன்பிறைந்தப்பிப்
பின்னைதன்றுயகன்பேசுவானரோ. (கசஎ)

அருந்தவர்தங்களினதிகமாகிர்
திருந்தியசெயவினைச்சிந்தைசெய்தவர்
பெருந்தவர்பெறுப்பதம்பெற்றுவாழ்விரால்
வருந்தனீரொன்றரிமகிழ்ந்துகூறினான். (கசஅ)

பொலனுறுகலன்களும்பொன்னிறுடையு
நலனுறத்தந்தைதாய்க்களித்துநாரணன்
சிலைநுதலாய்ச்சியர்திரட்குமாயர்க்கும்
விலையில்பூடணமெலாம்விளங்கவீந்தனன். (கருO)

நந்தனையசோதையைவணங்கிநாரணா
னிந்துநேரானனமிலங்குமாய்ச்சியர்
சிந்தைதாம்பிற்செலத்தேரினேறியே
துந்துமிமுழங்கிடத்துவரைசேர்ந்தனன். (கருக)

துவசமார்துவரையிற்சேர்ந்துதூயதா
நவமணிக்கோயிலைநண்ணிநாரணன்
றவமுறுதேவகிதாளின்வீழ்ந்தனு
முவமையில்குமரனையுச்சிமோந்தனள். (கருஉ)

மாவவெகிர்நிகர்மைக்கணுண்மனைப்
பூவினைத்துறந்துயர்விதர்ப்பன்பொன்மனை
மேவியமெல்லியலுடனும்விஞ்சிய
தேவியரனைவரும்வணங்கிச்சேர்ந்தனர். (கருகூ)

ஆய்பகர் தானையென்றன் றனைநகிற் றடத்திற்சேர்த்துக்
கையினானிறுகப்புல்லிக்கலவியையுவினைக்குங்காலை
மெய்யெனக்கருதியேயான்விழித்திடவிவனைக்காணே
னய்யவாறறிவேன்யாதேயென்றுபின்னுரைக்கலுற்றாள். (௮௯)

ஆயிழையெனக்குறியின்பக்கலவியைத்தந்திந்த்தாய
புயவெனுமருவிற்றனைப்பிரித்தென்றனுயிர்போமவண்ணம்
மயர்வினைநிறைத்துக்கிரைந்தகன்றிடவிழித்துப்பார்த்த
வயனுன்விழையப்பாதேற்றென்செய்வதிங்கேதென்றாள். (௯0)

[illegible]னிற்கேதுமக்கவன்றனைக்காண்பதென்றுதாய
மயலானான்முகிழ்த்திறேங்காளிலேனரமோவுஞ்
வையவனப்பறைத்தேனுள்ளங்கலங்கிமெய்கனகமானே
றுயிரினியுடலிற்றங்காகாண்டியென்றுரைத்துச்சோர்ந்தாள். (௯௧)

உயிரிலையென்னச்சோர்ந்தவுடாங்கனைதன்னையன்னச்
செயலுறுநடையளாயசித்திரரேகைபங்கை
கயிலெடுத்தணைத்துவாசவியசலங்லவைகொட்டி
யயர்வினையொழித்துத்தேற்றிப்பின்னிவையறையலுற்றாள். (௯௨)

வனசமன்னுலகரெண்டிக்குறைதருவோர்மண்ணினுள்ளோ
ரனைவரினெழில்சேர்ந்தாரில்யானறியாதாரில்லை
கனவினுன்முன்னரெய்திக்கலவிசெய்தகன்றான்றன்னை
வனிதைநீகாண்டியென்னவரைந்தனள்படத்தின்மீதே. (௯௩)

சித்தசனியக்கர்சித்தர்வித்தியாதரர்கடேவர்
மத்துறுகரத்தன்வானோர்நாயகனுமையாளீன்ற
வித்தகன்முதலினோரைவிளக்கியபடத்தைநோக்கி
யித்தனைபேரில்யான்காண்குறிசிலைக்காணேனென்றாள். (௯௪)

வேறு

இன்னலிலாதுயர்சித்திரரேகை, நன்னிலமேலெனதிருக்கண்ணிடவாழு
மன்னவர்தம்மையுமரைந்திடலோடு, மன்னவரன்றெனநோக்கினளன்னம். (௯௫)

துவரையின்மதனருள்சுதனெழில்பார்த்தென், குவிமுலைமீதினணைந்துயிர்கொண்டா, னிவனிவனிவனிவனிவனிவனென்றே, யுவமையின்மாதுவருந்தியுரைப்பாள். (௯௬)

கனவினிலென்னையணைத்திடுகள்வன், வனிதையென்முன்னின்வரைந்தபடத்தி னனைவரினும்முயராடவன்வாயா, வினியசொல்கூறிலனென்றயர்வுற்றாள். ()

மலரணைமீதுமயங்கியபேதை, யிலவிதழ்வாயெழிற்சித்திரரேகை
கலவையொடேபனிநீர்கலன்மெய்யி, னலனுறவீசனுநாரிதெளிந்தாள். (௯௮)

தேறியுடாங்கனைசித்திரரேகாய், மாறில்வயப்புயனாரிவன்மதனோ
நீரணிவோன்மகனோநெடுமாலோ, கூறெனவேருறுகொடியிவைசொல்வாள். ()

தேவகிதந்தருள்சீகரன்மைந்தன், பூவுறுவாளியினோனருள்புதல்வ
னேவியநானுமுருத்திகழ்வோனுன், றாவியனானிருத்தமனோமால். (௱0)

வித்துமருத்தினைவென்றிடும்வாயாய், நித்திலவாணகையாய்நிகரில்லாச்
சித்தசன்மைந்தனுரத்திடைசேர, வைத்தனைமாதவமெய்த்தினையென்றாள். (௱௧)

அஞ்சலேவாணனருட்புதல்வீரா, ணிஞ்சிகள்சூழ்துவராபதியெய்திக்
கஞ்சமலர்க்கொடிபெற்றருள்காமன், மஞ்சனுடன்வருவேனெனநவில்வாள். ()

நீயயராதிருங்கரின்மடந்தாய், மாயையின்மாயன்மகன்சுதனைக்கொண்
டேயெனுமுன்னிவணெய்துவனென்று, மீயுயர்வானின்விரைந்துபெயர்ந்தாள்.

திகழ்கலனகிலொளிர்சித்திரரேகை, ககபதிவிசையினுமுடுகினள்கடல்சூழ்
சிகரமொடெயில்கள்சிறந்திடுதுவரை, நகரெழினோக்கினளிருநயனத்தால்.(சச)

கடலகழாகியகவினுறுமெயில்கள், வடவரைநிகரெனவானுறநிறையுங்
கொடியினினிரவுறவேகொழுமணியின், சுடரொளியாற்பகலாகியதுவரை.(சரு)

புயலிணையணவியபொழில்பொலிவுறவே, யமிபவிரதமொடணிகழுமலிய
வெயிலவளொளிதருகலனகில்மிடையக், கயனிகர்விழியினர்கவினிறைநகரம்.()

காசணிநகிலியர்கயல்விழியிலக, வாசவினெழிலுறவாடினரொருபால்
வாசமென்மலர்மலியிமசலமடவார், வீசினராடவர்மேலுறவொருபால். (சஎ)

சுகனெனமறையறையறுதொழிலவர்கள், மகமுடிவனசெய்துமகிழுவரொருபா
ணகில்கலனணிபவர்நாயகர்விரகச், சிகியுறவவரொடுசீறுவரொருபால். (சஅ)

இந்துவின்வதனியரிழைகள்மெய்யிலகக், கந்துகநிலனறையுங்கவினொருபா
றந்திகளிவுளிகடமணிவிரத, முந்திடுகுமரர்களெழிலுறுமொருபால். (சகூ)

மாதவர்விரகமுறத்தனிமடவார், கீதநலோசைகிளத்துவரொருபாற்
காதலினுயர்கணவரிடத்தே, தூதினையேவிடுதோகையரொருபால். (ருo)

கோடுகெடாரைகள்கொம்புகள்வாரான், மூடியபேரிமுழங்குவவொருபால்
ஊடியமாதர்கள்விரகமுளுறவே, கூடுவராற்புரிகொண்கரையொருபால். (ருக)

இவ்வெழிலுறுதுவராபதியிலகச், செவ்விதழ்வாயினள்சித்திரரேகை
நவ்வியொண்விழியினினோக்கிநகர்போ, லவ்வியமகல்புரியிலையெனவறைவாள்.

ஏசறுதுவரையினெழிலினைநோக்கி, வாசவனகரளகாபுரிமலரோ
னுசகல்பதிமுதலாநகரெல்லா, மாசறுமெனுமுரைகூறிமகிழ்ந்தாள். (ருங)

இனையனகூறியசித்திரரேகை, வினையறுதுவரையினெய்திடும்வேலைத்
தினகரனவிர்குடதிசையினின்மறைய, நனியிருள்பரவினநாலிருதிசையும்.(ருச)

வேறு

பகலவன்குடதிசைப்பரவைமூழ்கவே, யுகவிறுதியினிடையுமையினுயகன்[தே.
புகரிபவுரிபுவிமூடப்போர்த்தபோற், ககனமெண்டிசையெலாங்கங்குல்பாய்ந்த

சித்திரரேகைதன்குழலிற்சேலிணை, வைத்தெனவயங்குகண்மையின்மற்றவள்
குத்திரமனத்தினின் கொள்கையேலவே, யெத்திசைதொறும் பரந்திருண்ட
கங்குலே. (ருசு)

அங்கண்மாவவனியிற்றிமிரமான்றுற, வெங்கணுந்தாரகையாரம் பூண்டெழுங்
கங்குலினுரத்தின்வெண் கலவைசேர்த்தபோற், பொங்கிளந்திங்கண் மங்குலிற்
பொலிந்தனன். (ருஎ)

அவனியெண்டிசையினம்பிறைநிலாவுற, வுவமையின்மதன்சுதனுறையுங்கோ
யிலிற், குவிமுலைச்சித்திரரேகையாங்கொடி, துவசமெய்மறைந்திடத்தோன்றன்
மாறினள். (ருஅ)

முனிவிலமெனுநடவியாவுடைக்கலைக்கொடி முடிப்
பனவினிக்கடிகாவிற்றன்னெழில்கண்டனைக்கவுற்றுக்
கனிபவட்குமயெயக்கனர்நோக்கியேசடைகெண்டிருமைப்
பனைபுக்கலதுருகவொடிமின்றனிமனமுடைநாளர். (௪௬)

## வேறு.

உன்மயமுற்பெயோதனகடாவோடிலவண்ணிமோரி
மன்மதனடலாலவாடினை டாள்வரவியிறுதார
நன்மலர்சூட்டாருசயிறுடைபூனாமுடவியாண்டாய்
பொன்மயமாரூறியலர்பயிதுனிமைப்படலவுயினர்டா. (௪௭)

சந்திநேயணியிற்செந்தூமெலன்பாடமணியவளைசேர
விந்துவையுயருமென்றெனமொழியாளரியுமுகடிழகாரு
ளந்தகனுருவாமிலையெனவையாளர்நிலையுறநோக்கிச்
சிந்துவிரெறியாற்சிந்தையினையர்வாடினியுனாசெயலாமோ. (௪௮)

அன்றிவினிசையாலயருவடுயிலாளருவகோனயனத்தா
டென்றன்மெயுறவேசிறுவணளினத்திருமெனவொளிர்வார்கா
ளொன்றியமணிநாவோவசையின்மெலிவாயுய*ரிபெயர்கொண்டாள்
†கொன்றையையணிவான்பெயருறவுழையுங்கொடியிடைதுயரிதால். (௪௯)

உடலிடையுயிர்தானிலையெனவயருமுடையினிலமுனர்யாரோ
படமிசையெழில்சேர்பவர்களைவரையப்பார்த்தவருளைநோக்கிக்
கடிகமழ்பொழிலிற்கனவிடையணையுங்காவலனிவனென்றே
அடியிடைமடவாள்படுதுனியொருவந்துவரையின்யான்வந்தேன். (௫௦)

துனியறுதுவரைப்பதிதனிலெய்திச்சோதிசெயெழிலாலுன்
மனையவடனைமண்மிசையினின்வைத்தேமலரணைதனையேந்தி
யுனையுயர்வானிற்கொடுகடிதிவணிலுற்றனனுடைகாணுங்
கனவினினவளைமயல்செயுமுதல்வாவென்றனள்கவின்மிக்காள். (௫௧)

இனியவிவ்வுரையைச்சித்திரரேகையியம்புமுன்னெழின்மிக்க
வனிதையர்திலகமாயவள்வாணன்மகண்மலர்மகள்போலத்
தினகரனவிர்சேர்மணியுறுகலன்பெய்திகழ்வுறமுனமொய்தி
யனமெனுநடையாளுவகையினநிருத்தனையடிதொழுதாளால். (௫௨)

வந்தடிதொழுதேநின்றிடும்வாணன்மகளெழிலினைநோக்கி
யிந்திரைபுதல்வனருளியவநிருத்தனுமயலெழவோடுஞ்
சந்திரவதனச்சித்திரரேகைதமருடன்மறைபோழ்திற்
சுந்தரியுடனேமலரணைமிசையிற்றூயவன்மகிழ்வுற்றான். (௫௩)

கலவைகளுதிரக்கரமிசைவளைகள்கலகலகலவென்றே
யொலியுறநன்னூபுரமிருதாள்களினோலமிடக்கோல
மலருறுமளகங்களமெனவலையமதிமுகம்வெயர்வாகக்
கலனுறுநகிறன்பதியுரமுறவேகலவிசெய்தனளன்றே. (௫௪)

* அரிபெயருள்ளொன்றுமால் ஆகவேமால்கொண்டாள் என்க.

‡ கொன்றையையணிவான்பெயருள்ளொன்றுபித்தன் ஆகவே பித்துக்கொண்டுழைந்தாள் என்க.

## வேறு.

அரிமைந்தனருட்சுதன்மேலசுர, ரிரையுங்கடல்போலவெதிர்த்திடவே
சுரரிந்திரனெண்கணன்றாயவர், செருவின்றிறல்சேர்த்துநோக்கினரால். ()

சினருத்திரர்வந்ததிரட்சியென, வசுருத்தமன்மேலடரும்பசுர
ரினரத்திரமெய்திடவெய்தினர்வா, கனரத்தமெரேடுகலங்கினரால். (க0கூ)

எதிர்வந்துதயித்தியரெய்திடமா, பதினாய்ரனருட்டனையன்பரியக்
கதைகொண்டுகனைத்தினியப்படைய, வதைசெய்தனன்மாகரிவீழ்ந்திடவே. ()

கரிபட்டனவீரர்கள்கால்களொடுந், தரையற்றுவிழுந்தனரஞ்சவிலாப்
பரிபட்டனதேருறுபாகர்கடஞ், சிரமற்றனமூளைகள்சிந்திடவே. (க0௨)

ஏறெறிறையஞ்சவெதிர்த்தவர்கை, யெலும்புடல்விண்டுவிழுந்திடவே
பாராடிலம்பரவுங்குருதி, யாறுமெனவோடவடித்தனறால். (க0ச)

உடலற்றனவும்பல்களோடிரதம், பொடிபட்டனவீரர்புரண்டிடவே
குடரற்றுமடிந்ததுமாகுருதி, கடலுற்றதுகூளிகளித்திடவே. (கக0)

கொடியற்றுவிழுந்தனகேடகமு, மடியற்றுவிழுந்திடவேயசுரர்
முடியற்றுமடிந்தனர்மூளைகணங், குடர்பற்றியருந்தினகூகையினம். (ககக)

## வேறு

வேலாளர்வாளினர்கள்வில்லினர்கள்பாய்மாத், தேராழிசூழிரதமோடுதுகளாகக்,காலாளதாகியுயருங்கதையினாலே, பாலாலமென்னமதன்மாமகனறைந்தான்.

பீடுடையதேர்நிரைபிளந்துகிலன்விழக், கோடகமொடேகரிகுலேந்துமடிவெய்தவீடினர்கள்வாளவுணர்வீழியகவந்த, மாடியதுசெங்குருதியாறெனமடுப்ப. (ககங)

மாதவனருட்சுதன்மகன்கதையினாலே,மோதுதலும்வீரர்கண்முடித்தலைசிதைந்துபூதலமிசைக்கரிகள் பொன்றவசுரேசர், வீதிதொறுமோடினர்கள் விண்ணவர்களாட. (ககச)

வேளருள்சுதன்கதைகொடே விரைவின்மோத, மூளுமடன்மீளி முடுகிப்படியினெய்த, ஞாளியினமோடிமெய்நடுங்குவதுபோல, வாளவுணர்பாறினர்கள்வானவர்நகைப்ப. (ககரு)

மாதவனருட்சுதன்மகன்கதைகொடெற்ற, வீதிதொறும்வேலையெனவெங்குருதிவெள்ளம், போதவசுரேசர்திரள்பொன்றுசெயல்கண்ட, தீதுமுயல்வாணனுயர்தேர்மிசையுருத்தான். (ககசு)

கலன்கணிறைமெய்கவினுறக்கவிகையோங்க, வலங்கொள்கரமாயிரம்வயங்கிவிடவாண, னிலங்குமகுடங்கிரியினென்றெழுவதொத்தே, துலங்குமசுரேசர்திரள்துன்னவெதிர்வந்தான். (ககஎ)

காகளமுழங்கவுயர்பேரிகைகறங்க, நாகமெணிலாதவடநாகமெனமேவமாகமுறவேகதலிகைத் திரள்வயங்க, வேகமொடுசென்றனன் விணோர்கள்மிகவஞ்ச. (ககஅ)

தாவுபரிதேர்நிரைகள்சாரவெதிரில்லா, மாவலவனூருமிரதத்தினுயர்வாணன்கோவியர்கணுதன்மகனல்கியகுமாரன், மேவியொளிர்வீதியின்மிடைந்துறவளைத்தான். (ககக)

மன்னனின் மேவிலட்டுத் திக்கின் மெய்யுடையசுரரின்
விண்ணின்மேநகரந் துலங்கா நிற்கேயிற் றெனினுமியானே
நண்ணிநம்மகன்செய் தன்னைக் காணருவனென்றுகாந்
கண்ணினீர்துடைத்துத் தேவினா கலக்கலையென்று சொன்றான். (கடுசு)

தேவியெந்துயராடாந்தியற்றுந் திறமென்று செப்பிக்
காவியங்கண்ணுறுந் தையலைக் கையினாற்றக்
கோவியர் துவிஸ்கள்கொண்டாங் கோபுரவாயில்வெய்த
மாவணிகரித்தேர்துன்ன மன்னவர்பிடைந்தார்மாதோ. (கடுஎ)

சாத்தகிமுதனைன் சாம்பன்றுலகீதனையன்குந்தி
மூத்தவனவன்றனயன் முதலினோர் முன்னாந்தேருங்
காத்தவனருகிற்சென்றுகந்துமுறநியேனிவேர்ப்ப
மெத்திரஞ்சிவக்கப்பிறிகின்றிவைகிடத்திருந்தால். (கடுஅ)

மானவனருளைமைந்தன்மகன்றனைக்கொண்டுபோனார்
தானவனொனினும்வானோர்தலைவன்றுனெனினுமுன்று
ளாவியிலுரியைப்போத்தானெனினுமாண்டயரின்வென்றே
யினமிலியுடன்சேயைக்காணருவம்பகியென்றார். (கடுகூ)

அரசர்களறைந்தவாமெச்சுதனாகிதேயென்ன
முரசுதுந்துமிகள்கோடுமுழங்கிடனைகவிட்டடங்
களைசெயாவுநதிபோலக்காசினியிடத்தின்வாறோர்
வளைசெறிபழுவமெண்டிக்கினைவயெலாம்வணங்குழ்ந்தார். (கசுo)

வேறு.

பொறியுகும்விழியினவொன்றோர்பரமெரிசெயுமிறைநிகர்வார்
கறையடிபுரவிகள்விடுவார்கதமுறுமனதினரஞ்சா
ரிறுதியினனலெனவெழுவாரிடியெனவதிர்தருகுரலார்
நெறிகளையடையுமினென்றுகவமிசைசிருபர்கள்மிடைவார். (கசுக)

காகளமொடுவளைதுடிகைதரடிகைபடவிகையிமிலே
சாகரவொலியெனவறையத்தரணிகடிசைதொறும்விரவி
னேகியிரதிமகவினையேயார்கொடுபோயினவனையே
நாகணையரியொடரசர்கவிழுமுறாரதன்வந்தான். (கசுஉ)

சுரர்முனிவிரைவினியனைந்திச்சுந்தரவரியொடுசொல்வா
னிரவிடையிரதிதன்மகனையெழிலுடையோவியரோகை
விரைவினினொருநொடியிடுமுன்விண்மிசையேகொடுவிடவே
யரியுறுகுழலுடைமின்றுண்டுறவவனைவளையணைத்தான். (கசுங)

உடையொடுமெதனனருட்சேயுறவதையறியுயர்வாணன்
கடலெனவணிநனிவிட்டுக்கடுமையினவைசெயமுனியா
விடமுமிழரவுறுபடையால்வேளருள்குமரனையொளிசெய்
கொடியவனிருகைபிணித்தானெனுமுறைகூறினன்முனிவன். (கசுச)

நாரதனிவ்வுரைநவிலநாரணனுயர்சசிநிறபன்
வாருதியருள்மகன்மகன்வல்லூகமனருளியயின்சேய்
சிரதிறுயர்சினிசெப்பநேர்கள்குரகதவனிக
மாரதர்திரளொடும்வாணன்வளநகரொயிலேவளைத்தார். (கசுரு)

நந்தனுடையபாந்தன்சாரணர்முதலினர்நண்ணத்
துந்துமிகோடியர்முரசந்துடிகையொடெங்குமொலிப்ப
விந்திளைநாதன்வளைத்தானிவுளிகடேர்நிரையெண்ணி
றந்திமுநாலக்குரோணிதானைகளும்புடைசூழ. (கசுசு)

மாதவன்வந்தெயில்சூழ்வாணன்முனிந்துயர்தேரின்
போதகமாவணிபிரதம்பொருபடையசுரர்களெல்லா

விதியொடமரர்களும்வெருவவயிரவர்கள்
கதைகள்கொடுபரிகள்கரிகள்படவறைய
நதிகணிகர்குருதிபரவநடமிடுவர்
குதிகொள்குகியரொடுகொடியவலகைகளே. (௨௪௬)

தேர்கடனையெறிவர்சீறுகரிகடமை
வாரியுறவுதைவர்வாசியுடனுமவர்
வீரர்தலைகிளுவர்மேவுபிரமதர்கள்
பாரினடமிடுவர்பாறுகழுகுறவே. (௨௪௭)

வாயுவெனவறைவர்வாரியெனவளைவர்
தீயதெனவடர்வர்சீறுவயிரவர்கள்
பாயுமிவுளிகரிவீரர்படியின்மிசை
சாய்வர்தழலடரவேகுசருகெனவே. (௨௪௮)

கழைகொள்வரைகணிகர்காலவயிரவர்கள்
விழியினுமிழழல்கள்வீறியடரவுய
ரெழிலிகருகிநிலன்விழுவவிமையவர்க
ளழியுமுலகமெனவெருவியலறினரே. (௨௪௯)

வேறு.

பூதமாதீவிழிப்பொறிகள்வேதாளமோ
டேதமார்பிரமராக்கதரிடாகினியுளோர்
தீதுசேர் கூர்ச்சமாண்டார் சினம்மலியவே
காதினாரரசர்கள்கதைகளான்மடியவே. (௨௫0)

பரிகளைத்துகளுறப்படிமிசைப்பிசைகுவார்
கரிகணற்கோடுகைகாலும்வேறுகவே
தரையினிற்றுகைசெய்வார்தமனியத்தேர்களை
வரையிடத்தறைகுவார்வயிரவத்திரர்களே. (௨௫௧)

கோடுடைக்கரிகளின் குருதியைப்பருகியே
யாடிநற்பரிகளின் றசையருந்திடுவர்தேர்
சாடிவெஞ்சூரர்தந்தலைகளைத்திருகுவார்
பாடியங்கோடியேபிரமராக்கதர்பலர். (௨௫௨)

பூதவேதாளமாவயிரவர்பொங்கியே
பாதவம்வேர்பறித்தோங்குபல்வரையின்மேன்
மோதிவெங்கதையினான்முடுகியேசாடவே
யாதவப்படைஞர்நில்லாதிரிந்தோடினார். (௨௫௩)

தோலினற்றோலினைப்போர்த்தவன்படைஞர்சூழ்ந்
தாலகாலம்மெனவடரவேயரசர்கண்
ஞாலமீதோடலுங்கண்டனல்நயனனுத்
தாலகேதனனலங்கைக்கொடேதாக்கினான். (௨௫௪)

கயிலையங்கிரியெனக்கையினலந்திகழவே
சயிலநேர்பூதவேதாளடாகினியர்தஞ்
செயலழிந்தோடவேசெகதலங்குலையவே
முயலகன்முதுகினின்றான்முனம்மோதினான். (௨௫௫)

சிகியெனுங்கண்ணன்வெண்சிகரமேபோலவான்
புகையுயிர்த்தேயலத்தாற்புடைத்திடலுமே
குகியரும்பிரமராக்கதர்களுங்குருதிவா
யுகநிலத்தோடினாரும்பருங்காணவே. (உருசு)

வடிவனற்பிறழுகண்மதிவணன்றஞ்சிலா
விடிகளோங்கவின்விழுந்தென்னமோதிடலுமே
கொடியவெங்கூச்சுமாண்டருமுளங்குலையவே
கடுகியேயோடினார்குருதிவாய்காலவே. (உருஎ)

அரவெனச்சீறியேயலமெடுத்தரிமுனோன்
பரவையைக்கடையுமத்தனையமாவயிரவர்
சிரமிசைக்கடிதடித்திடலுமேதிசைதொறும்
வெருவியக்கணநிலத்தோடினார்வெள்கியே. (உருஅ)

புரமெரித்திமொன் படைஞராய்ப்பொருமவ
ருரமிசைக்கிரியின்வீழுருமெனச்சசிவணன்
கரமெடுத்தலமுறக்கடுகியேமோதலும்
பிரமதப்பெயரினார்பீதியோடோடினர். (உருக)

வேறு.

சினியருட்சுதன்முனிவொடுந்தியதேரின்மீதுயர்சிலையினு
லனலுகுத்திமொசுகங்களையாசைதோறுநிறைத்திட
முனைமிகுத்தடர்பிரமராக்கதர் மூளும்வெஞ்சினடாகினி
யினநடுங்கிமெய்க்குருதிநீர்நில னிழியவெங்கணுமோடினார். (உசுo)

மாரன்வெஞ்சிலைகோலிநாணொலிவாளொடண்டமலிந்திடக்
கோரவெங்கணைநூறுகோடிவிடுக்கவெங்குருதிப்புனல்
வீரம்விஞ்சியகுகியர்பூதர்பசாசர்மெய்யினிலருவியாய்ப்
பாரினேடைவுனைந்துநொந்தவர்பாறினார்திசைதோறுமே. (உசுக)

சாம்பனெண்டிசைதோறும்வில்லுறுசாயகங்கள்விடுத்திடப்
பாம்பணிந்தருளீசன்வெம்படையோர்கண்மேனிதனிற்படத்
தூம்பினுள்வருநீர்கள்போலுதிரங்கள்வந்துசொரிந்திட
நாம்புகோமினியென்றுமிச்சமரென்றுபாறிநடுங்கினர். (உசுஉ)

தாலகேதனன்மதனன்விஞ்சியசாத்தகிப்பெயரோனுயர்
ஞாலமெண்ணியசாம்பனேடிவர்நால்வரும்மடர்ந்தேபொர
வாலமாவிடமுண்டவன்விடுபடைஞரஞ்சிநிலத்தினிற்
காலின்முந்தியகாலினேடினர்கயிலையங்கிரிமீதரோ. (உசுஙு)

வேறு.

கூடுபூதகணமடங்கவோடும்வேலைகொடியளா
மோடியாளிமீதினேறிமுனிவர்தேவரஞ்சிட
நீடுதோல்கள்குரகதங்கள்நிருபரொங்குமடியவே
சாடினாள்பலாயுதந்தடக்கைதோறுமிலகவே. (உசுச)

கொடிகடேர்கள்குரகதங்கள்குஞ்சரங்கடுகெனுற
முடிகொள்வீரர்சிரமனந்தமுகில்கொள்வானநிறையவே
சுடர்கொளாயுதங்கரங்கடோறும்வீசியடருமக்
கடியளார்ப்புரித்தவோசைககனமுற்றுமுற்றவே. (உசுரு)

சினியருள்சுதனொடுசாம்பன்சீருறு
தனையர்களனைவருந்தாளிற்றாழ்தலு
மனமலிமகிழ்வொடுமொர்பிற்புல்லியே
கனமெனமாயவனின்றகாலையின். (கசு)

ஓவியம்பழித்தமெய்யொளிருருப்பிணித்
தேவியோடனைவருஞ்சிவிகைமீதினின்
மாவினமிபமுறுமன்னர்காக்கவே
மேவினரிந்திரப்பிரத்தம்விட்டரோ. (உ0)

மாதவன்றேவியரனைவரும்வரத்
தீதிலாத்துவரையினடைந்துதேவகி
பாதமீதிறைஞ்சிடப்பரிவினுமெடுத்
தேதமில்குமரனையிறுகப்புல்லினள். (உக)

செறுநர்கள்செருக்களத்தவியத்தேவர்க
ணறுமலர்பொழியநால்வேதமோங்கவே
நெறியுறுந்தேவியர்நிறைந்துசூழ்ந்திட
விறையவன்றுவரையினிலங்கினனரோ. (உஉ)

## தந்தவக்கிரன் வதைப் படலம் முற்றிற்று.

ஆ படலம் - ௯0 - க்குக் கூடிய திருவிருத்தம் - உஉஎஉ.

ஸ்ரீகண்ணபிரான் றிருவடித் தாமரை கடுணை.

ஸ்ரீ

விஷ்ணுமயம்.

கOகூ - வது பாண்டவர்

# வனவாசப்படலம்.

சூதினால்வஞ்சஞ்செய்துசுயோதனனடரக்கானின்
மாதினொடனுமேகுமறனிலாப்பாண்டுமைந்தர்
வேதனைதவிர்த்துத்தூயமீள்கிலாக்கதியையீய்ந்த
சீதரனைவெங்கோன்றிருவடிவணக்கஞ்செய்வாம். (க)

மன்னரொண்டருமராசன்மறமிகுசகுனிதன்னோ
டின்னல்செய்சூதையாடியியல்புறுநாடுந்தோற்றுப்
பின்னவர்தம்மைத்தோற்றுப்பிறங்கியகலன்கடோற்றுத்
தன்னையுந்தோற்றுத்தேவிதன்னையுந்தோற்றான்மன்னோ (உ)

மறுவிலாக்குழவியைவளர்த்தவெண்ணிலாப்
பறவைபேர்சகுந்தமென்றுரைபகர்ந்திடு
முறைமையாற்கண்ணுவமுனிவன்பெண்பெயர்
குறைவிலாச்சகுந்தலையென்றுகூறினான். (௨௯௪)

கானிடைக்கவுசிகன்கலந்தணைக்கவே
மீனகுவிழியண்மேனகைபயந்திட
ஊனமில்ககக்குலங்காப்பவொண்முனி
தான்வளர்த்திடுஞ்சகுந்தலையென்பேரென்றாள். (௨௯௫)

பின்னருஞ்சகுந்தலைபேசுவாளுயர்
மன்னவவுன்பெயரேதுவைகிடு
நன்னகர்தானெதுநவில்கநீயென
மின்னனாள்விளம்பவவ்வேந்தன்கூறுவான். (௨௯௬)

வேறு.

இந்துத்தருபுதனின்மரபுளின்வந்தவனெனதூர்
தந்திக்கடணிறையும்பிரதிட்டானவண்பதிதண்
சந்திற்படிதனத்தாய்பெயர்துச்சந்தமனென்றன்
சிந்தைப்படிமயறீர்க்குதியெனமாதிவைசெப்பும். (௨௯௭)

கந்தங்கனித்திரளேகொடுகெடிதின்வருமெந்தை
தந்தின்புரிநுன்மார்புறவணைப்பேனெனச்சாற்ற
வுந்தைவரத்தாழ்க்குமெனதுயிர்போமுனந்தழுவிச்
சிந்தைத்துணிதீர்ப்பாயெனத்திகழ்மாதிவையறைவாள். (௨௯௮)

ஓமக்கனன்முனரென்கழுத்தொளிர்நாணிதரித்துத்
தாமப்புயத்தணைப்பாயெனத்துச்சந்தன்சம்மதித்தே
வாமத்திரளெழுவேதியர்சொலுமந்திரப்படியின்
காமற்கவிடேகப்பெண்ணணைமணந்தான்களிப்புறவே. (௨௯௯)

இருவோருடலொருமெய்யெனவணைத்தெண்புளினிசையுந்
தரவேல்விழிசிவப்பக்கலையொருவப்பதந்தனிலார்
பரிநூபுரமரற்றக்கரவளைபம்பமதுவென
வருவேர்வுகல்வதனத்துறமதநூலினைவிளைத்தார். (௩00)

தந்தக்குறியதாரத்துறத்தனமேனகக்குறியு
முந்தக்குழலலையத்தொடைவிழச்சொன்மொழிபதறச்
சிந்தைக்களிப்புறவேயணைத்திருவோர்களுஞ்சிறந்து
கந்தக்கடுங்கோலெய்மதநூலின்கரைகண்டார். (௩0௧)

அனுராகவண்கடல்வீழ்ந்தெழுமிருவோருமன்புறமா
மனனீயிருமாதேநகரடைவேனெனமடமா
னுனைநான்பிரிந்துயிர்வாழ்கிலனெனவாண்டொளிர்நயனப்
புனறுரைகண்முலைமேற்குதிகொளவேபொருமினளால். (௩0௨)

தன்னாருயிரனையாடுயர்கண்டேதலவரசன்
மின்னேபுரியடைந்தேயுனையென்பாலினின்மேவப்
பொன்னார்வுறுமிரதம்வரவிடுவேனெனப்புகன்று
நன்னாரிதனயனப்புனறுடைத்தேநகரடைந்தான். (௩0௩)

பதியினெய்திறப்பண்புடைச்சந்தனுப்பெய[illegible]ஞ்
சுதனைநோக்கியேசொல்லுவான்சுரநதிபடியின்
மதியெனத்திகழ்வதனியாய்வருவனீயவளைக்
கதுமெனக்கலந்தணைத்தியென்றகன்றனன்கானின். (௬௪௪)

தந்தையிம்மொழியறைந்துகான்சாரச்சந்தனுமன்
சிந்தையின்மகிழ்வெய்திடச்சிறந்தமர்நாளிற்
றந்திரத்துடன்சானவிநதியினிற்சார
விந்தையேலவேபகீரதிமேவிமுன்னின்றாள். (௬௪௫)

அன்னமென்னடையந்தரநுசுப்பிருகொங்கை
பொன்னவிர்க்கலசங்களொண்கிரீவநற்பூகங்
கன்னறோள்சிலைநுதல்விழிகணைகுமிழ்நாசி
துன்னுமைமுகிற்குழலெனக்கொண்டுதோன்றினளால். (௬௪௬)

வந்துதோன்றியமடந்தைதன்வடிவினைநோக்கிச்
சந்தனுப்பொருமதனன்சாயகத்திறுற்றளர்ந்தே
யிந்துவெள்கிடுவதனியேயென்றனருயிருஞ்
சிந்தையுந்திறைகொண்டநீதேவியாகென்றான். (௬௪௭)

தீங்கறுங்குணச்சந்தனுச்செப்பவானதிமான்
பாங்கிலாதமாபாவம்யான்செய்கிலும்பரிவே
யோங்கவென்னைநீயணைத்தியேலமர்வன்றோவி
னீங்குவேனெனநிகழ்த்தினள்கிஞ்சுகமெனவே. (௬௪௮)

கோதையிம்மொழியறைந்திடக்குற்றமிலரசன்
பாதகங்களாங்கொலைத்தொழினீபலசெயினு
மேதமென்றுனையிகழ்கிலனிகழ்ந்திடினேகென்
றோதவானதியுளமகிழ்ந்தவனையுற்றணைந்தாள். (௬௫௯)

தத்தைநாணவேமொழிந்திடுசானவிதன்னோ
டத்திமாநகரடைந்துமன்னலர்மலரணையிற்
சித்தசன்னுடனிரதிமன்வெள்கிடச்சேர்ந்து
வித்தகத்துடன்சுரதநூற்கலவியைவிளைத்தான். (௬௫௦)

வேறு.

சந்தனுமன்னன்றோளிற்சாநவிமடந்தைதோய்ந்து
மைந்தர்களேழுபேரைப்பெறப்பெறமண்ணிறேடிச்
சிந்துவையதிரத்தாக்கிச்செல்லும்வானதியிற்போட
வெந்தசிந்தையனாயொன்றும்விளம்பிடாதிருந்தானன்றே. (௬௫௧)

பின்னருங்கங்கைமாதுபெற்றிடுமைந்தன்றன்னைத்
தன்னிருகரத்தினேந்திச்சாநவிநதியிற்போடு
முன்னமன்றடுத்துமைந்தரெழுவரைக்கொன்றமூர்க்கை
யின்னமிச்சிசுவைக்கொல்லேலென்றுகண்சிவந்தானன்றே. (௬௫௨)

தனையனைக்கொன்றபாவியென்றுமன்சாற்றமங்கை
யெனைமனுவிகட்சிசெப்பேலெண்டிசைவசுக்களெல்லா
முனிவனுங்கறைந்தசாபமுடுகவென்னகட்டிற்றோன்றிப்
புனலினுண்மடிந்தவண்ணங்கேளெனப்புகலலுற்றாள். (௬௫௩)

வேறு.

விரகமுற்றிடுமுனிபணிவிளைக்கமிக்<br>
கிருவிசும்பவனிதிக்கெலாமறைப்பவவ்<br>
வரிவைகைப்பிடித்தலுமவடன்மேனிசம்<br>
பரசரநாறுதென்றிவைபகர்ந்தனள். (௧௮௪)

சரிரமிச்சலசரநாற்றமின்றியே<br>
மருவுடன்மருவவாய்மலர்ந்துபோதயன்<br>
சரியெனத்தனையனைத்தந்துகன்னியா<br>
முருவொருவாதணைத்தருளென்றோதினான். (௧௮௫)

காசணிதனத்தினள்கழறலோடுமே<br>
யோசனைகெந்தியாயுயர்ந்துநான்மறை<br>
பேசிடும்புதல்வனைப்பெற்றுங்கன்னியா<br>
யாசகன்றிடுதியென்றவளைப்புல்லினான். (௧௮௬)

கரதலாமலகம்போன்ஞானங்காட்டுவான்<br>
பரதர்கோன்மடந்தைதன்பயோதரந்தழீஇச்<br>
சுரதநூல்விளைத்திடச்சுரர்துதிக்கவே<br>
சரதநான்மறைதருந்தனையன்றோன்றினான். (௧௮௭)

ஆசகன்முனிவனையணைத்தநங்கைதான்<br>
யோசனைகெந்தியாயுளமகிழ்ந்தவ<br>
ளேசகல்புதல்வனையீன்றுங்கன்னியாய்<br>
மாசகன்மணியெனவயங்கினளரோ. (௧௮௮)

வேறு.

முஞ்சிகோவணமுப்புரிநூலிவைவிளங்க<br>
மஞ்சனுவந்தடிபணிந்தனக்கிடர்வரினீ<br>
நெஞ்சினினையன்னையேநேர்வனென்றுரைத்து<br>
விஞ்சுதந்தையோடேகினன்வியாசனும்பெயரோன். (௧௮௯)

தன்னையுற்றணைத்திருந்தவன்றனையனோடேக<br>
வின்னலின்றியேயிலங்கியயோசனைக்கெந்தி<br>
யன்னமாமெனவலம்பியமணியெனவழகார்<br>
கன்னியாகியேயம்பியிற்கவினுறநின்றாள். (௧௯௦)

கங்கைமீதுநாவாயினைக்கடிதினிற்றிருப்பி<br>
மங்கைமீடலும்வலையர்கோன்மகளெழினோக்கி<br>
யெங்கண்மாதவத்தணங்கனையின்றுதொட்டென்றும்<br>
வங்கம்நீவிடேலெனவவண்மனைவைகுநாளின். (௧௯௧)

இந்துவின்குலத்திலங்கியசந்தனுவென்பான்<br>
றந்திவெம்பிடைத்தனிக்குடைநிழற்றிடத்தயங்கு<br>
நந்துசேரும்வானதிக்கரைநண்ணவவ்வலைப்பெண்<br>
கெந்தமெங்கணுங்கிளர்ந்துமன்னாசியின்மடுத்த. (௧௯௨)

கெந்தமெவ்வழிக்கிளர்ந்ததென்றதனெறியறிந்தே<br>
முந்திமன்னவன்றந்தியைமுடுக்கிவானதியி

அத்திரவிழியள்வில்லினள்கத்தளாம்பல்வாயா
ணித்திலநகையணத்தின்கழுத்தினணிகரிலாத
வித்துருமத்தின்மெய்யண்மின்னெனுமிடையளாய
மத்திரைகவினைநோக்கிமன்னவன்விரகமுற்றான். (௪௯௮)

விரகமுற்றெழுந்தமன்னன்விரைகொண்மத்திரையைப்பற்றிச்
சுரதநூல்விளைக்கவெண்ணித்தொடரவேதுனிகொணெஞ்சி
னரிவைகோவிணைநீர்சோரவன்னம்போற்பாறியாண்டோர்
வரையருகாகப்பூங்காவனத்தினுண்மறைந்தாளன்றே. (௪௯௯)

ஓவியமுயிர்பெற்றோங்குந்தன்மைபோலொளிகொணங்கை
யாவியும்பதைப்பப்பாறிமறைதலுமரசர்கோமான்
றேவியைத்தொடர்ந்துமாலின்சிகியுறமாள்வதெண்ணான்
காவினின்மறைந்துநின்றகாரிகைதன்னைக்கண்டான். (௫௦௦)

பங்கயத்தாளினூலின்மருங்கினிற்பகட்டின்கோடாங்
கொங்கையிற்குமுதவாயிற்குனிசிலைப்புருவந்தன்னிற்
செங்கையிற்கண்ணின்மாலின்சிகியுறச்செய்யதோரான்
மங்கையைப்பற்றினான்மன்மறலியுங்குறுகமாதோ. (௫௦௧)

இக்கிரதச்சொன்மங்கையிசைகிலாதுடல்கொடாளை
நக்கினமாகவாடையறித்துநற்குழலைப்பற்றிக்
குக்குடம்பெட்டைவன்பாற்புணர்வதோர்கொள்கைபோன்று
விக்கிரமத்துமன்னனணைத்துயிர்விட்டானிப்பால். (௫௦௨)

தனையர்கள்சூழக்குந்திதானங்கள்செய்துவந்து
மனைதனின்மகிணனோடுமத்திரைதன்னைக்காணு
டனியொடுஞ்சுதர்களோடுஞ்சோலையினெய்தித்தங்கை
தனியிருந்தரற்றப்பாண்டுமாண்டிருந்தன்மைகண்டாள். (௫௦௩)

மகிணன்மாண்டிடவேகுந்திவயிற்றினிலெற்றிவீழ
மிகவுமெய்நடுங்கிமைந்தரைவருமரற்றியேம்பச்
சுகனிகர்புனிதரெய்தித்தூயவர்தம்மைத்தேற்றி
யிகழ்விலாப்பாண்டுமன்னையீமத்திலிடுவித்தாரால். (௫௦௪)

சதுமறைமொழியின்மன்னைத்தழலிடைவளர்த்தலோடுஞ்
சுதைநிகர்மொழியளாயமத்திரைசுதர்கடம்மை
மதிநிகர்வதனியானகுந்திகைக்கொடுத்துத்தான்றன்
பதியுடனனலில்வீழ்ந்தாள்பார்த்தவரிரங்கியேங்க. (௫௦௫)

அனலிடையெரிந்ததந்தைதாயினுக்கறன்றன்மைந்தன்
வினையறுமறையோர்வேதம்விளம்பிடத்திலநீர்விட்டே
துனியுறுகுந்திபாதந்தொழுதுபின்னோர்கள்சூழ
வனதவொல்லாம்போதவத்திருபுரியிற்சேர்ந்தான். (௫௦௬)

வேறு.

அன்னையோடைவருமெய்தியந்தமன், முன்னரின்வணங்கலுமுனிவர் வேந்தநின்,பின்னவன்மத்திரன்பெண்ணினுளுடன்,மன்னியேயணைந்துமாண்டனனென்றோதினார். (௫௦௭)

பின்னவனிறந்தனனென்றபேச்சினான், முன்னவனிரங்கழுதாதையானவன், றன்னிருவிழியினீர்தரையிறைடவே, வன்னியின்மெழுகெனவாடினானரோ. (௫௦௮)

